Regd M. 5008.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்து ஷூ பங்குனிமீ 16உ 29—3—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலவ்வல்மீ 17உ திங்கட்கிழமை. } இதழ் 10

## ஹைதராபாத் விஷமம்.

**நிஜாம்** ஹைதராபாத்தை தனக்கே சொந்தமென்று எண்ணுகிறார். பிரஜைகள் தங்கள் சமஸ்தானம் என்று நினைக்கின்றனர். தன்னுடைய யதேச்சாதிகாரத்தை நிலைநிறுத்த, நிஜாம், மஜ்லிஸ் இத்திஹாதுல் முஸ்லிமீன் பாஸிஸ்ட் ஸ்தாபனத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார். சமஸ்தானத்தில் மக்கள் ஆட்சி ஏற்படாமல்தடுக்க பாஸிஸ்டுகளிடம் தனி ராணுவமும் இருக்கின்றது. ஆர்ப்பாட்டங்களை நடத்தவும், ஆயுதங்கள் கையாளவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். அநேகமாக நிஜாம் சர்க்காரின் மூலம் அவர்களுக்கு ஆயுதங்களும் கிடைத்து வருகின்றன. அவர்களிடம் ஏராள்மான லாரிகளும், டிரக்குகளும் இருக்கின்றன. அதற்கு வேண்டிய பொருளுதவியும் பெட்ரோலும் சர்க்காரிலிருந்தே கிடைக்கின்றது. சர்க்காரின் ஆதரவில் அவர்களுடைய துணிச்சல் அதிகரிப்பது இயற்கையே. அதனால் அவர்கள் எதிரிகளை பயமுறுத்துகின்றனர் சில இடங்களில் கொலை, கொள்ளை போன்ற காரியங்கள் நடந்தும் வருகின்றன. இந்நிலையில் ஹைதராபாத் பிரச்னை, இந்தியா ஹைதராபாத் பிரச்னை மட்டுமல்ல. எதேச்சாதிகாரிக்கும், பிரஜைகளுக்கும் இடையே இருக்கும் தகராறு, பிற்போக்குக்கும் ஜனநாயகத்திற்கும் நடக்கும் போராட்டம், நியாயத்திற்கும், அநியாயத்திற்கும் நடந்துவரும் பலப்பரீட்சை என்றே சொல்ல வேண்டும். இந்திய சர்க்கார் யதேச்சாதிகாரத்தையும் பிற்போக்கையும் அநியாயத்தையும் ஆதரிக்க வேண்டுமென நிஜாம்சர்க்கார் விரும்புகின்றது. ஹைதராபாத் பொதுமக்கள்மீது பாஸிஸ்டுகளின் ஆதிக்கத்தை இந்தியா ஒப்புக்கொள்ள வேண்டுமென முயற்சிகள் நடக்கின்றன. அதனால் ஹைதராபாத் மக்களுக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கே இடைஞ்சல் உண்டாக்க

கோடைகாலம் ஆரம்பித்துவிட்டது

Truthful READY MADE CLOTHES

லேசான துணிகளில் தயாரிக்கப்பட்ட

"ட்ரூத்புல்"

—: ரெடிமேட் ஆடைகளை :—

அணிந்து ஆனந்தம் அடையுங்கள்.

எங்கும் ஒரே விலை

ட்ரூத்புல் மான்யூபாக்சரிங்

கம்பெனி லிமிடெட், மதுரை.

எண்ணுகின்றனர். இவ்வித நிலைமையை இந்தியா அனுமதிக்க முடியாதென்பது நிச்சயம். பாம்புக்கு பால் வார்க்க இந்தியா தயாராய் இருக்கமுடியாது. நிஜாம் கோஷ்டியாருக்கு போதுமான அவகாசம் அளித்தாய் விட்டது. அந்தரங்க சுத்தியிருந்தால் பொதுஜன சர்க்கார் ஏற்படுத்தி நிர்வாகத்தை ஜனப்பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க நிஜாம் தயங்கவேண்டியதில்லை. ஜனநாயக அடிப்படையில் பிரச்னை தீர்க்கப்பட சமஸ்தானத்தின் எதிர்காலத்தைக் குறித்து தீர்மானிக்கும்உரிமை பொது மக்களுக்கு வழங்கப்படவேண்டும். பிரஜைகளின் உரிமைகளையும், அதிகாரத்தையும் பறித்து அவர்களுடைய இஷ்டத்திற்கு நேர்மாறாக 18-வது நூற்றாண்டின் பிற்போக்கு முடியரசாக ஹைதராபாத்தை மாற்றுவது நடக்காத காரியம். நிஜாம் அரசாங்கம் தன்னுடைய விஷமத்தனமான போக்கை உடனடியாக மாற்றிக் கொள்ளாமல் இருப்பதை இந்தியா இனி அதிக நாள் சகித்துக்கொண்டிருக்கப் போவதில்லை.

ஹைதராபாத் பிரச்னையிலுள்ள சிக்கல்களை, பண்டித ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல் நன்றாக உணருகின்றார்கள். திருந்தி வரும்படி ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பண்டித நேரு நிஜாம் சர்க்காரை எச்சரித்திருக்கிறார். இந்திய பார்லிமெண்டில் சர்தார் பட்டேல் ஆஜராயில்லாமலிருந்தபோது ஹைதராபாத்தில் பொறுப்புவாய்ந்த சர்க்கார் ஏற்படவேண்டுமென்றும் அவ்வித சர்க்காரே ஹைதராபாத் இணைப்பு விஷயத்தை தீர்மானிக்க வேண்டுமென்றும் ஸ்ரீ காட்கில் பகிரங்கமாக அறிவித்தார். பிரிவினைக்கு முன்பும் பிறகும் அரசியல் இலாகா செய்த சில சதிகளையும் ஸ்ரீ காட்கில் பிரஸ்தாபித்தார். எவ்வித ஒப்பந்தமுமின்றி ஹைதராபாத்திலிருந்து ராணுவத்தை வாபஸ் பெற்றதன் முழுப் பொறுப்பையும் அவர் அரசியல் இலாகா மீதே சுமத்தினர். ஸ்ரீ காட்கில் அதை பூரணமாக விளக்கவில்லையாயினும் அவ்வித சதிகள் இன்றைக்கும் நின்றபாடில்லை என்பது உண்மை. பிரிவினைக்குமுன் நிஜாமுக்கு பின் பலமாக இருந்து வந்த ஆசாமிகள் இன்றைக்கும் இந்திய சர்க்காருக்கு முட்டுக் கட்டையாக ஹைதராபாத்தை உபயோகிக்க முயற்சித்தே வருகின்றனர். நவம்பர் 29-ல் கையெழுத்தான தாற்காலிக ஒப்பந்தமே அவர்களுடைய சதிகளுக்கு போதிய சாட்சியாகும். தீட்சண்யமான அறிவாளி சர்தார் வல்லபாய் படேல் ஹைதராபாத் நிஜாமின் ஏஜெண்ட் ஜெனரலை நியமிக்கும் உரிமையை அவசரப்பட்டு ஒப்புக்கொண்டதை நம்மால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அத்துடன் கரன்ஸி, தபால் பில்லைகள் அச்சடித்துக் கொள்ளவும் நிஜாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல. இருசாராருக்கும் இடையே தகராறோ அபிப்பிராய பேதமோ ஏற்பட்டால் மத்தியஸ்தத்திற்கு விடப்படவேண்டுமென்ற ஒப்பந்தத்திலுள்ள பாராவும் ஆட்சேபிக்கப்படவில்லை. உண்மையில் இந்த நிலைமை இந்திய சர்க்காரை பலஹீனப்படுத்துவதாகவே இருக்கிறது. இந்தியாவின் அரசியல், பூகோள அந்தஸ்து சகல அம்சங்களிலும் பலம் வாய்ந்தது. ஒரே வாரத்தில் யூனியனுடன் சேரும்படி ஹைதராபாத்தை நிர்ப்பந்தித்திருக்க இந்தியாவால் முடியும். இந்நிலையில் நம் சர்க்கார் மேற்கண்ட விதம் ஒரு வருஷத்திற்காக ஒப்பந்தம் செய்து கொண்டதுதான் ஆச்சரியமாக இருக்கின்றது. நடந்தது நடந்தேறிவிட்டது. இனி அதை குறித்து வருந்தவேண்டிய அவசியமில்லை. இனியாகிலும் இந்திய சர்க்கார் உறுதியான நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். சமஸ்தான இலாகாவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதைவிட்டு நிஜாம் சர்க்கார் கவர்னர் ஜெனரல் மூலம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய சர்க்கார் இடமளிக்க வேண்டிய அவசியமென்ன? நிஜாம் பிரதிநிதிகள் சர்தார் படேலை அணுகுவதைவிட்டு லார்டு மவுண்ட் பேட்டனிடம் என் செல்லவேண்டும்? சமஸ்தான இலாகாவை விட்டு வேறு யார்மூலமாகவும் பேச்சுவார்த்தை நடத்த இந்திய சர்க்கார் தயாரில்லை என்று ஹைதராபாத் அரசாங்கத்திற்கு அறிவித்துவிட வேண்டியது அவசியம் நிஜாமுக்கு யோஜனை கூற ஸர் மாங்டன் துரை இங்கிலாந்திலிருந்து வருவதும் பாகிஸ்தானுக்கு ஓடி ஓடி நிஜாம் மந்திரிகள் மிஸ்டர் ஜின்னாவை கலந்து பேசுவதும் விபரீதங்கள் விளைவிக்கலாம் என இந்திய பொது மக்கள் அஞ்சுகின்றனர். எனவே கண்டிப்பான, தீர்மானமான, இறுதி நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்திய சர்க்கார் ஹைதராபாத் சதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர்.

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகஸ்டிலிருந்து மார்ச்வரை பாகிஸ்தான் மந்திரிகளின் பங்களா அலங்காரத்துக்காக ரூ 2,02,000 சிலவிடப்பட்டிருக்கிறது. அவருடைய செக்ரெட்டரிகளின் பர்னிச்சருக்காக ரூ 1,35,000மும், லியாகத் அலிகான் பங்களா, நந்தவனத்திற்கு மட்டும் ரூ 30,000மும், சிலவிடப்பட்டுள்ளது

'நியூலிந்து' பத்திரிகை கீழ்வரும் சில புள்ளி விபரங்களையும் சேகரித்திருக்கின்றது. P. W. D. மத்திய இலாகா கட்டிடங்களுக்காக சிலவிட்ட தொகை ரூ 8,50,000 ஆனல் அந்த இலாகாவைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சம்பளம் ரூ. 22,09,000மாகும்.

சுங்க இலாகாவின் சம்பளம் ரூ 1,77,000 ஆனல் சுங்க ஆபீஸர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அலவன்ஸ் ரூ. 5,50,300 இதை ஒருவித நோக்கமுமின்றி அப்படியே படித்தபிறகு "சுதந்திரம் பறிக்கப்படுவதை நான் விரும்பமுடியாது" என்று நம்முடைய பிரதம மந்திரி அறிவித்ததில் உண்மை இல்லாமலில்லை என்பது விளங்கும்."

(அஸாத் லாகூர் 16—3—48)

# பதவிப் பித்தர்களின் பணப்பேராசை.

[‘**எரியும்** வீட்டில் பிடுங்கியது லாபம்; பாகிஸ்தானில் நடப்பது அதுதான். லீக்லீடர்களின் சுயநலத்தை நாம் எடுத்துகாட்டுவது ‘டான்’ புளுகுகளை வேதவாக்காக நினைக்கும் சிலருக்கு பிடிப்பதில்லை. பாகிஸ்தான் முன்னேற்றத்திற்காக சம்பளம்கூட வாங்காமல் மிஸ்டர் ஜின்னா கவர்னர் ஜெனரல் கடமைகளை நிறைவேற்றி வருகையில் அவரை சுயநலக்காரர் என்று சொல்லுவது நியாயமல்ல என்று பல லீக் அன்பர்கள் தங்கள் வருத்தத்தை தெரிவித்தும் கொண்டார்கள். ‘ஆஸாத்’ என்னும் லாகூர் உருது தினசரியான பாகிஸ்தான் பத்திரிகை 16—3—48 இதழில் பிரசுரித்திருப்பதை வருத்தப்படும் அன்பர்களின் சந்தேக நிவர்த்திக்காக கீழே தருகின்றோம். தினம் இரண்டு திர்ஹம் (ஒன்பது அணா) பெற்று ஒட்டுப் படைகள் உள்ள சட்டையை அணிந்து ‘கிலாபத்’ ஆட்சியை நடத்திய கலீபா உமர் கத்தாப் (ரலி) யைவிட ஒரு படி மேலாக இந்திய முஸல்மான்கள் எண்ணியிருந்த மிஸ்டர் ஜின்னாவின் உண்மை சொரூபம் இதன் மூலம் முஸ்லிம்களுக்கு விளங்குமென்று நம்புகிறோம். மிஸ்டர் ஜின்னா பனியா வகுப்பைச் சேர்ந்தவர் என்று அறிந்திருப்பவர்கள் இச்செய்தியால் ஆச்சரிப்படுவதற்கில்லை. ஏழை பாகிஸ்தான் பிணத்தை லீக் கழுகுகள் கொத்தி அலங்கோலப்படுத்துவதை பார்த்தபிறகாவது பிரிவினை முஸ்லிம் பனியாக்களின் சூழ்ச்சி என்று பாமர முஸ்லிம் பொதுமக்கள் உணர்வார்களாக! காய்தே ஆஜம் மாதம் ஒரு ரூபாய் மாத்திரம் பெறுவதாக தன்னுடைய பத்திரிகையான “டான்” வெளியிட்டதை மிஸ்டர் ஜின்னா மறுக்காமல் இருந்துவிட்டது குறிப்பிடத் தகுந்த விஷயமாகும்.]

’—ஆசிரியர்.

### உங்களுக்குத் தெரியுமா?

“பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் அலவன்ஸ் உள்பட மாதம் ரூ 22, 250 சம்பளம் பெறுகின்றார் என்று பாகிஸ்தான்பட்ஜெட்டில் வெளியாய்விட்டது.”

“பட்ஜெட்டில் சம்பளம் காட்டப்பட்டிருக்கையில் சம்பிரதாயத்திற்காக கவர்னர் ஜெனரல் ஒரு ரூபாய் மாத்திரம் சம்பளம் பெறுவதாக ‘டான்’ பத்திரிகை எப்படி வெளியிட்டது? என்று அசெம்பளியில் மிஸ்டர் கஸ்தார் கேட்ட ஒரு கேள்விக்கு பாகிஸ்தான் நிதி மந்திரி கீழ்வரும் பதிலளித்தார். ‘டான்’ அறிவிப்பு பொய். பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் தன்னுடைய சம்பளத்தை எவ்வித குறைவுமின்றி சரியாக அடைந்து வருகிறார். ஆகவேதான் பட்ஜெட்டில் மேற்கண்ட தொகை அனுமதிக்கப் பட்டிருக்கிறது.”

“மிஸ்டர் M. U. அப்பாஸியை ஆசிரியராகக் கொண்ட கராச்சியின் ஆங்கில பத்திரிகையான “நியூ லிங்து” இதைக்குறித்து கீழ்வருமாறு எழுதுகிறது. “இந்தியாவைப் போன்ற பெரிய ஒரு தேசத்தின் அந்நிய கவர்னர் ஜெனரல் சம்பளத்தைவிட இது அதிகம். சிலவுகள் உள்பட இந்திய கவர்னர் ஜெனரல் மாதம் ஒன்றுக்கு ரூ. 20,000த்தைவிட சற்றுக்குறைவாகவே பெறுகின்றார். நம்முடைய கவர்னர் ஜெனரலின் சம்பளம் அதைவிட 2,250 ரூபாய் அதிகம்.”

“நம்மைப் பொருத்தவரை நமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. பாகிஸ்தான் அரசாங்கம், காய்தே ஆஜம் இரண்டுக்கும் அர்த்தம் ஒன்றுதான். இதைவிட அதிகசம்பளம் பெறவும் அவருக்கு உரிமைஉண்டு ஆனால் ‘டான்’ பத்திரிகை காரணமின்றி எதற்காக பொய்யான கதைகளை கட்டுகிறது என்பதுதான் கேள்வி. ஒரே ரூபாய் பெறுகின்றார் என்று எழுதாவிட்டாலும் காய்தே ஆஜம், காய்தே ஆஜமாகவே இருந்திருப்பார். 22½-ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வசூலிக்கின்றார் என்று வெளியாய்விட்ட பிறகும், அவர் காய்தே ஆஜம் அல்லவென்று மறுக்க யாருக்குத் துணிச்சலுண்டு?”

### சற்று இதையும் கேளுங்கள்.

“பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் நடைமுறை வருஷ சிலவுகள் கீழ்வருமாறு:—

| | |
|---|---|
| சம்பளம் ரூ. | 1,25,000 |
| அலவன்ஸ் ரூ. | 30,000 |
| பிரயாணச்சிலவுகள் ரூ. | 1,02,000 |

இத்துடன் கவர்மெண்ட் ஹௌஸின் இதரசிலவுகளும் சேர்க்கப்பட்டால் மாதம் ரூ. 22,250க்கு பதிலாக ரூ. 27,870 ஆகின்றது.

பட்ஜெட்மீது கூறப்பட்ட குறைகளுக்கு லியாகத் அலிகான் அரசியல் நிர்ணயசபையில் பதிலளிக்கையில் “பாகிஸ்தானிகள் பட்டினியாகவும், நிர்வாணமாகவும் இருப்பதை நான் சகிக்கமுடியும். ஆனால் சுதந்திரம் பறிக்கப்படுவதை நான் விரும்பமுடியாது.” என்று கூறினார்.

(2-ம் பக்கம் பார்க்க)

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 | 29—3—'48 திங்கட்கிழமை | இதழ் 10


## சோஷியலிஸ்ட் வெளியேற்றம்.

(அவர்கள் அபிப்பிராயர்.)

சோஷியலிஸ்டுகள் அனைவரும் எப்ரல் 15-க்குள் காங்கிரஸிலிருந்து விலகிவிடவேண்டுமென நாஸிக் சோஷியலிஸ்டு கன்வென்ஷன் தீர்மானித்துவிட்டது இதர கட்சிகளை சேர்ந்தவர்களுக்கு இடமில்லை என்று காங்கிரஸ் தீர்மானித்துவிட்ட பிறகு சோஷியலிஸ்டுகளின் இவ்வித முடிவு எதிர்பார்த்ததற்கு மாறுபட்டதல்ல. காங்கிரஸைவிட்டு விலகாமலிருந்தால் சோஷியலிஸ்டு கட்சியே மறைந்துபோக வேண்டியிருக்கும் என்பது உண்மை அதைத் தவிர்க்கவேண்டுமானால் வெளியேறுவதைத் தவிர சோஷியலிஸ்டுகளுக்கு வேறு வழியில்லை. நாட்டின் விடுதலைக்காக போராடிய ஸ்தாபனம் காங்கிரஸ் மஹா சபைதான். அதில் சோஷியலிஸ்டுகளின் பங்கு சிறப்பானது. 1942 போராட்டத்தில் சோஷியலிஸ்டுகளை பாராட்டாமல் இருக்கமுடியாது. சுதந்திர போராட்டத்தில் காங்கிரஸுக்குள்ளிருந்து தீவிரமாய் போராடிய சோஷியலிஸ்டுகள் இன்று பிரிந்து செல்லுகின்றனர். சுதந்திர நாட்டில் பல கட்சிகள் இருப்பதால் தீங்கில்லை. ஆனால் அவை பிற்போக்கு சக்திகளின் ஆயுதமாக உபயோகிக்கப்படாமல் இருக்கவேண்டியதவசியம். காங்கிரஸ்காரர்களும் சோஷியலிஸ்டுகளும் பரஸ்பரம் குறை கூறிக்கொண்டிருக்கமாட்டார்களென்று நம்புகிறோம். அதனால் பிரயோஜனமுமில்லை. வெளியேறுவதற்கு காங்கிரஸே காரணம் என்று சொல்லுவதால் நன்மை ஏற்பட முடியாது. சோஷியலிஸ்டுகளையும் காங்கிரஸ் லீடர்கள் குறைகூறுவதுசரியல்ல சோஷியலிஸ்டு நண்பர்கள் காங்கிரஸுக்குள்ளிருந்தே வேலை செய்யவேண்டுமென்பதே நம் ஆசை. சோஷியலிஸ்டுகளின் லட்சியங்கள் காங்கிரஸுக்குமாறுபட்டவையல்ல, இருவரின்லட்சியங்களில் ஓர்மையுண்டு. நாட்டின் பல சிக்கலான பிரச்னைகள் தீர்க்கப்படாத இந்நிலையில் சோஷியலிஸ்டுகள் காங்கிரஸுடன் ஒத்துழைத்து வேலை செய்வதால் நன்மை ஏற்படும். சமஸ்தானாதிபதிகளின் யதேச்சாதிகாரம், வகுப்பு வாதம், பிற்போக்கு சக்திகளின் கொம்மாளம் முறியடிக்கப்படவேண்டும் லஞ்சத்தை ஒழித்து, சர்க்காரை பலப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்காதவரை பொதுஜன நன்மை சாத்தியமில்லை. இருப்பினும் அந்தரங்க சுத்தியுடன் இருவரும் நடவடிக்கையில் இறங்கினால் அதனால் பொதுமக்களுக்கு நன்மையே ஏற்படமுடியும். இன்று காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குள் இருந்துவரும் பல குறைகள் நீங்க முடியும். நாஸிக் கன்வென்ஷனில் பேசிய சோஷியலிஸ்டு தலைவர்களின் பிரசங்கங்களால் நாம் அவ்விதம் நம்ப இடமிருக்கிறது. காங்கிரஸ் பலம் பெற்றால் மத்தியிலும், மாகாணங்களிலுமுள்ள காங்கிரஸ் மந்திரிகளின் கை வலுக்கும். அதனால் காங்கிரஸ் திட்டத்தை நிறைவேற்றிவைப்பது சாத்தியமாகும். லஞ்சத்தை ஒழித்து நிர்வாகத்தை செப்பனிட்டு வகுப்புவாதிகள் பிற்போக்காளர்களை முறியடித்து தொழிலாளர்கள் விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கவனம் செலுத்த முடியும். எனவே சோஷியலிஸ்டுகள் வெளியேறுவதைக் குறித்து நாம் கவலைப்படவேண்டியதில்லை. நாட்டிற்கு பாதகமான காரியங்களை சோஷியலிஸ்டுகள் செய்வரென்று கனவிலும் நினைக்கமுடியாது. அவர்களுடைய தன்னலமற்ற சேவையை சந்தேகிக்கமுடியாது. காங்கிரஸ்காரர்களுக்கும் சோஷியலிஸ்டுகளுக்கும் இடையே சமய சந்தர்ப்பங்களைக்குறித்து அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். லட்சியத்திலும், நோக்கங்களிலும் தேசநலன் சம்மந்தப்பட்டவரை வித்தியாசமில்லை. சோஷியலிஸ்டுகள் அந்தரங்கசுத்தியுடன் கடமைகளை நிறைவேற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை ஆயினும் தங்களுடைய எதிர்கால திட்டத்தை அவர்கள் தெளிவுபடுத்தியாகவேண்டும். இது உடனடியாக செய்யவேண்டிய வேலை. திட்டத்தை தெளிவுபடுத்தாமல் இருந்தால் பாமர மக்களிடையே அபிப்பிராய பேதங்கள் வளரலாம். அது நாட்டிற்கும் சோஷியலிஸ்டு கட்சிக்கும் உகந்ததல்ல. எனவே காங்கிரஸை புனிதப்படுத்தவும் சர்க்காரைப் பலப்படுத்தவும் பிற்போக்கு சக்திகளையும் வகுப்பு வாதத்தையும் முறியடிக்கவும் லஞ்சத்தை ஒழிக்கவும் தொழிலாளர்கள், விவசாயிகள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் ஐக்கிய சமுதாயத்தை உருவாக்கி நவ இந்தியா பரிணமிக்கச் செய்யவும் சேஷியலிஸ்டுகளின் திட்டம் என்ன? என்பதை விளக்கும்படி நாம் சோஷியலிஸ்டு தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

# ஜமீயதுல் உலமா எதிர்காலம்.

## மௌலானா மதனியின் எட்டு யோசனைகள்.

"சுதந்திர இந்தியாவில் இந்திய அரசியல் சக்தியை வகுப்புவாததுறைகளில் சிதறடிக்காமல் பொதுவானதொரு ஐக்கிய சமுதாய அடிப்படையை உருவாக்க வேண்டியதவசியம். ஜமீயதுல் உலமாவின் நடவடிக்கைகள் மத, கலாசார, கல்வி உரிமைகள் சம்மந்தப்பட்டவரை மட்டுமே இருந்துவரும். அரசியல் உரிமைகள், கடமைகள் பொருத்த வரையில் வகுப்புவாதமற்ற கூட்டு முயற்சியின் பக்கமே முஸ்லிம்களை அழைக்கப்படும்." பதஹ்பூரி மசூதியின் ஜீவன் பக்ஷ்ஹாலில் மவுலானா ஹுஸைன் அஹ்மத் மதனி தலைமையில் கூடிய ஜமீயதுல் உலமா கவுன்ஸில் மேற்கூறிய முடிவு செய்திருக்கிறது.

பல முக்கிய தீர்மானங்களின் மூலம் ஜமீயதுல் உலமாவின் லட்சியங்களின் சில அடிப்படை மாறுதல்கள் செய்யப்பட்டன. வேலைத் திட்டவிதிகளை திருத்தவும், மாற்றி யமைக்கவும் 5 பேர்களைக் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இந்திய பார்லிமெண்ட் சுதந்திர ஜனநாயக குடியரசுக்கு அடிகோலியிருப்பதை பாராட்டியும் காங்கிரஸின் கொள்கையும் மகாத்மா காந்தி விரும்பியதுமான உர்து, நாகரி லிபிகளில் எழுதப்படும் இந்துஸ்தானியே அரசாங்க பாஷையாக இருக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானமே முக்கிய தீர்மானமாகும். காஷ்மீர சிங்கம் ஷேக் அப்துல்லாவை பாராட்டியும் சகலவிதங்களிலும் உதவியளிப்பதாக உறுதி கூறியும் பாகிஸ்தானில் உள்ள ஜமீயதுல் உலமாவின் ஸ்தாபனங்களைத் தனியாக, ஒதுக்கிவிட்டு தங்களுடைய நோக்கங்களுக்கேற்ப நடந்துகொள்ள அனுமதிக்கப்பட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மௌலானா ஹுஸைன் அஹ்மத் மதனியின் சுருக்கமான முடிவுரையுடன் கவுன்ஸில் கூட்டம் முடிவடைந்தது. மௌலானா மதனி கீழ் வரும் 8 யோஜனைகளை கவுன்ஸிலில் வாசித்தார்.

1. பலம் வாய்ந்த, சுதந்திர, ஜனநாயக, இந்தியாவின் லட்சியத்தையே நாலரை கோடி இந்திய முஸ்லிமான்கள் தங்கள் லட்சியமாகக்கொண்டு தங்களுடைய முழு சக்தியையும் ஆதரவையும் இந்திய சர்க்காருக்கு அளிக்க ஒன்றுபட்டு முன்வர வேண்டும்.

2. கடந்த 10 வருஷ நிகழ்ச்சிகளின் பலனாக ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலைமையில் முஸ்லிம்கள் உறுதியுடனும் சகிப்புத் தன்மையுடனும் இருப்பதுடன் பூரண ஜனநாயக நாடாக இந்தியா திகழ்ந்து அதில் முஸ்லிம்கள் இதர தேசீய சகோதரர்களுடன் சமத்துவத்துடனும் கண்ணியத்துடனும் வாழ்க்கை நடத்தும் நன்னாளை எதிர்பார்க்கவேண்டும்.

3. மகாத்மா காந்தி தன்னுடைய ஆத்மாவை அர்ப்பணித்து ஏற்படுத்தியிருக்கும் ஒழுக்கம், ஜனநாயகம், சகோதரத்துவம், அமைதியின் கூட்டு அணியில் வெற்றி பெற திட்டமாக முடிவுசெய்து இந்திய முஸல்மான்கள் இந்திய தேசீய காங்கிரஸில் சேர வேண்டும்.

4. மத்திய மாகாண அரசாங்கங்கள் சார்பில் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த கமிஷனர்களுக்கும், ஜில்லா அதிகாரிகளுக்கும் சிறுபான்மையோர் விஷயமாக சுற்றறிக்கை தயாரித்து அனுப்பி அதை அனுசரித்து நடந்து கொள்ளும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட வேண்டுமென்றும் இந்தியாவின் பல்வேறு இடங்களில் அபிப்பிராயம் இருந்து வருகின்றது.

5 இந்திய முஸல்மான்கள் மனித ஒழுக்கத்தின் உன்னத லட்சியங்களை கருத்தில் கொண்டு துன்புற்ற அகதிகளுக்கு சாத்தியமான உதவி அளிக்கவேண்டும். புதிய வாழ்க்கையை தொடங்குவதில் பிரதேச மக்களுடனும் குறிப்பாக முஸ்லிம்களுடனும் சகோதரத்வ உறவு கொள்ளும்படி அகதிகளையும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

6. பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்களும் குறிப்பாக உலமாக்களும் இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும், சீக்கியர்களும், கடத்திச் செல்லப்பட்ட இரண்டு சமூகங்களையும் சேர்ந்த நிரபராதி பெண்களை மீட்பதில் அந்தரங்க சுத்தியுடன் உயிரையும் திரணக மதித்து நடக்க வேண்டும்.

7. பாகிஸ்தானிலிருந்து திரும்பி வரவிரும்பும், பாதிக்கப் பட்டவர்களையும் பரிதபிக்கத்தக்க நிலைமையில் இருக்கும் உத்தியோகஸ்தர்களையும் இந்திய சர்க்

# நினைக்கும் கேடு தனக்கு.

**பா**கிஸ்தான் பத்திரிகைகளும் பட்டாணிய மலை ஜாதியினரைக் குறித்து ஓலமிட ஆரம்பித்துவிட்டன. எல்லைப்புற பிரதமர் பட்டாணிய பட்டினி பட்டாளத்தை வெகு தந்திரமாக காஷ்மீர் மீது திருப்பிவிட்டார். வயிற்றுக்கொடுமையால் பட்டாணியர்களும் கொள்ளையடிக்க காஷ்மீரில் படையெடுத்து வந்தனர். சில தினங்களாக இந்திய ராணுவம் கொடுத்துவரும் அடிபொருக்கமாட்டாமல் கொள்ளைக்காரர்கள் சிதறி ஓடுகின்றனர். அவ்விதம் ஓடிவந்தவர்கள் மேற்கு பஞ்சாபில் புகுந்து கொள்ளையடிக்க ஆரம்பித்திருக்கின்றனர் கராச்சியிலிருந்து வெளியாகும் மார்க்கெட் என்ற பத்திரிகை 'பட்டாணிய கொள்ளைக்காரர்களின் அடாச் செயல்கள்' என்ற தலைப்பின் கீழ்ப்பின் வருமாறு எழுதுகின்றது.

"சில தினங்களாக சர்கோதா, குஜராத் பிரதேசங்களில் பட்டாணிய ஆயுத பாணிகள் சிறிய கிராமங்களைத் தாக்கி வருகின்றனர் என்று செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இதுவரையில் பல கிராமவாசிகள் எல்லைப்புற கொள்ளைக் கூட்டத்தின் துப்பாக்கிகளுக்கு இரையாகிவிட்டனர். ஏழை விவசாயிகளின்மீது துன்பங்களின் மலை சரிந்துவிட்டது. இதனால் நகரங்களில் உள்ள வியாபாரிகள் சரக்குகளை தருவிப்பதில்லை. அநேகமாக வியாபாரிகள் கடைகளைத் திறக்கவும் பயப்படுகின்றனர். மலை ஜாதியினர் கடைகளிலிருந்து சாமான்களை எடுத்துக் கொள்ளுகின்றனர். தடுக்க முயற்சிப்பவர்களின்மீது துப்பாக்கி முனை திருப்பப்படுகின்றது. "காஷ்மீர் போர் அரங்க வீரர்களாகிய எங்களுக்கு நீங்கள் உணவு கொடுக்காவிட்டால் வேறு எவன் கொடுப்பான்" என்று அவர்கள் மிரட்டுகின்றனர்.

மேலும் அப்பத்திரிகை "சர்க்கார் கொள்ளை வீரர்களை, உடனே கட்டுப்படுத்தவேண்டும். இல்லையேல் இந்த அபாயம் வளர்ந்து பாகிஸ்தான் முழுவதையும் ஆக்ரமித்துக்கொள்ளும். பட்டாணிய கொள்ளைக் கூட்டத்தினரில் இஸ்லாமைவிட கொள்ளையடிப்பதை அதிகமாக நேசிப்பவர்களின் எண்ணிக்கையே அதிகம் அவர்களுடைய பசியைத் தீர்க்க சர்க்கார் வழி செய்ய வேண்டும். பலத்தைக் கொண்டு அவர்களை அடக்குவது சாத்தியமில்லை. ஏனெனில் பட்டினிக்கு பலியாவதைவிட துப்பாக்கிக் குண்டுக்கு இரையாவது மேல் என்று அவர்கள் நினைக்கின்றனர். அவர்களுடைய பசி தீர்க்கப்படாத வரையில் அவர்கள் கொள்ளையடித்துக்கொண்டேயிருப்பார்கள்" என்று எழுதுகின்றது.

இரவு பகலாய் லாரிகளில் அமைக்கப்பட்ட ஒலி பெருக்கிகளின்மூலம் செய்யப்பட்ட ஜிஹாத் (புனித யுத்தம்) பிரசாரத்தைக் கேட்டு உயிர்விடத்துணிந்து வந்த பட்டாணிய ஏழை மலை ஜாதியினரை முடிவில் பாகிஸ்தான் பத்திரிகையே கொள்ளைக்கூட்டத்தினர் என்று எழுதுகின்றது. இந்திய அரசாங்கம் மாத்திரம் அவர்களைக் கொள்ளைக்கூட்டத்தினர் என்று சொல்லிவிட்டால் பாகிஸ்தான் லீடர்கள் எரிந்துவிழுகின்றனர். காஷ்மீர் கொள்ளையடிக்கப்படும்போது பாகிஸ்தான் லீடர்கள் பேரானந்தமடைந்தனர். இன்று தங்கள் குரல்வளைக்கு ஆபத்து வரும்போது கூச்சலிடுகின்றனர். 'மார்க்கெட்' ஆசிரியர் கவலையடைவதில் பிரயோஜனமில்லை. பாகிஸ்தான் அவர்களுடைய பசியைத் தீர்க்கமுடியாது. பாகிஸ்தான் லீடர்களுக்கு அவகாசமுமில்லை. இஸ்லாமின் பெயரால் பட்டாணிய துரதிர்ஷ்டர்களை பட்டாளத்தில் சேர்த்து ஏதாவது ஒரு அரங்கத்தில் ரஷ்யாவுக்கு எதிராக பலியிட்டால் எல்லாம் சரியாகிவிடும். அறியாமைதானே! அதை பிரயோஜனப்படுத்திக்கொள்ள பாகிஸ்தான் லீடர்கள் தயங்கமாட்டார்கள். பாகிஸ்தான் லீடர்களை ஆயுதமாக உபயோகிப்பதற்கு வெள்ளையர்கள் இருக்கவே செய்கின்றனர்.

---

5-ம் பக்கத் தொடர்ச்சி.

கார் சாத்தியமான எல்லா உதவியும் செய்ய வேண்டும். அதைப்போலவே இந்தியாவிலிருந்துவரும் அல்லது வரவிரும்பும் அகதிகள் பொதுமக்களாயினும் உத்தியோகஸ்தர்களாயினும் பாகிஸ்தான் அவர்களை வரவேற்று உதவியளிக்க வேண்டும்.

8. இஸ்லாமின் போதனைகளை மதித்து முஸ்லிம் அல்லாதாருடன் நேர்மை சமத்துவத்தை அனுசரித்து நடக்கவும் பிரஜா உரிமைகளைப் பெற்று அவர்கள் அமைதியுடன் பாகிஸ்தானில் வாழ்க்கை நடத்த வசதி செய்யவும் சர்க்காரை தூண்டுவது பாகிஸ்தான் உலமாக்களின் கடமை.

இஸ்லாமிய ஜனநாயக கொள்கைப்படி தன் புற்ற மக்களுக்கு உதவி செய்ய உலமாக்கள் தங்களுடைய சேவைகளை அர்ப்பணிக்க வேண்டும். இந்திய முஸல்மான்களின் மத சம்மந்தமான சேவைகளின் பொருப்பு ஜமீயதுல் உலமாவை சேர்ந்ததாகவே இருந்துவரும்.

கடந்தகால பேதாபேதங்களை மறந்து இத்துறையில் சேவை செய்ய ஜமீயதுல் உலமாவின் மெம்பர்களாக சேர்ந்து கடமையைச் செய்ய முன் வரும்படி நான் இந்திய முஸல்மான்களை அழைக்கின்றேன்.

[நடவடிக்கைகளின் முழு விபரமும் அடுத்த இதழில்]

8-ம் இதழ் தொடர்ச்சி.

# பாதுகாப்பு கவுன்ஸிலில் காஷ்மீர்.

———:O.———

**கவுன்ஸில் தலைவர் தீர்மானங்கள்.**

1. இந்தியா, பாகிஸ்தானுடன் ஜம்மு காஷ்மீர் இணைப்பு பிரச்னை முடிவு செய்யப்படவேண்டுமென இந்தியாவும், பாகிஸ்தானும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளுகின்றன. எனவே ஜனநாயக அடிப்படையில் பாரபட்சமற்ற முறையில் பொதுஜன வாக்கெடுப்பு நடக்க வேண்டியதவசியம். ஆகையால் பொதுஜன வாக்கெடுப்பு பாதுகாப்பு கவுன்ஸிலின் அதிகாரம் மேற்பார்வையின்கீழ் நடத்தப்பட வேண்டுமென கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

2. ஜனவரி 17,20 தேதிகளின் கவுன்ஸில் செய்த முடிவையொட்டி காஷ்மீரில் நடக்கும் யுத்தமும் சம்மந்தப்பட்ட இதர பிரச்னைகளும் தீர்க்கப்பட கீழ்வரும் விஷயங்களை கவுன்ஸில் முடிவு செய்கின்றது.

**கமிஷனின் அலுவல்கள்.**

1. பாதுகாப்பு கவுன்ஸில் கமிஷனின் வேலைகளில் தன்னுடைய அதிகார வரம்பிற்குட்பட்டு உடனடியாக யுத்தத்தை நிறுத்தவேண்டியதும் ஒன்று என்பதை உணர்ந்திருக்கின்றது.

2. இவ்வித லட்சியத்தை அடைவதற்காக காலம் கடத்தாமல் உடனடியாக கமிஷன் நடவடிக்கையில் இறங்கும்.

கவுன்ஸில் தலைவரின் இரண்டு தீர்மானங்களும் பாகிஸ்தானுக்கு சாதகமானவையென்று இந்தியா நிராகரித்துவிட்டது தலைவரின் தீர்மானங்களின் மீது நடந்த விவாதத்தில் பிரிட்டன், அமெரிக்கா பங்கெடுத்துக்கொண்ட முறையிலிருந்து கவுன்ஸில் அங்கத்தினர்களில் 9 பேர் பாகிஸ்தானை ஆதரித்தனர் என்பது வெளிப்படை. ரஷ்ய, அமெரிக்க பிரச்னைகளில் இந்தியா நடுநிலைமை வகித்ததற்கு ரஷ்யா நடுநிலைமை வகித்து பழி தீர்த்துக்கொண்டுவிட்டது.

பிப்ரவரி 10-ந்தேதி கவுன்ஸிலின் புதிய தலைவர் மெக்நாட்டன் (கனடா) "பெல்ஜிய, கனடிய பிரதிநிதிகளின் பிரேரேபணைகளை யாதொன்றை இந்தியா நிராகரித்து விட்டதால் இந்தியத் தீர்மானத்தின்மீது இறுதியான முடிவு செய்தாகவேண்டு"மெனகவுன்ஸிலுக்கு ரிப்போர்ட் செய்தார். அதன் பிறகு புதிய தலைவர் மெக்நாட்டன் ஓர் தீர்மானத்தை சமர்ப்பித்தார்.

**மெக் நாட்டன் தீர்மானம், ஜனவரி 10.**

1. இந்தியா பாகிஸ்தான் புகார்களை பரிசீலித்த பிறகு பாதுகாப்பு கவுன்ஸில் கீழ்வரும் முடிவுக்கு வந்திருக்கிறது. ஜம்மு காஷ்மீரின் இணைப்பு பிரச்னை உடனடியாக தீர்க்கப்படவேண்டும். ஜம்மு காஷ்மீர், இந்தியா பாகிஸ்தான் நலன்களுடன் சம்மந்தப்பட்டிருக்கிறது.

**அமைதி நிலைநாட்ட வேண்டும்.**

2. ஜம்மு காஷ்மீர் யுத்தம் நிறுத்தப்படுவதும் அமைதி நிலைநாட்டப்படுவதும் அவசியமும் முக்கியமுமென கவுன்ஸில் கருதுகின்றது. ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தின் மேற்பார்வையின் கீழ் இருதரப்பாரும் திருப்தியடையும் வகையில் ஜனநாயக அடிப்படையில் பாரபட்சமற்ற முறையில் பொதுஜன வாக்கெடுப்பு உடனடியாக எடுக்கப்படவேண்டியது அவசியமென கவுன்ஸில் கருதுகின்றது.

**கூட்டு முயற்சிகள்.**

3. கீழ்வரும் லட்சியங்களை அடைவதற்காக இந்தியா பாகிஸ்தான் கூட்டுமுயற்சிகள் அவசியமென கவுன்ஸில் அபிப்பிராயப்படுகின்றது.

(அ) பலாத்காரம் நேசப்பான்மையற்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

(ஆ) ஜம்மு காஷ்மீரிலிருக்கும் ராணுவத்தினரும் ஆயுத பாணிகளான தனி நபர்களும் பரிபூரணமாக வெளியேற்றப்படுவதில் இருதரப்பாரும் சாத்தியமான அளவுக்கு தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தவேண்டும்.

(இ) நிர்வாகத்தையும், அமைதியையும் நிலைநிறுத்த காஷ்மீரில் நிரந்தர ராணுவம் வைக்கப்படவேண்டும் பொதுஜன வாக்கெடுப்பு மூலம் இணைப்பு பிரச்னை தீர்க்கப்படும்வரையில் அரசாங்கங்கள் பொறுப்பேற்கவேண்டும்.

[ஈ] அமைதி, சமாதானம் ஏற்பட்ட பிறகு ராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும்.

(உ) அமைதி, சமாதானம் ஏற்பட்டபிறகு கலவரங்களின் காரணமாக ஜம்மு காஷ்மீரைவிட்டு வெளியேறிய அனைவரும் திரும்பி வரவழைக்கப்பட்டு சட்டபூர்வமான அரசியல் கிளர்ச்சிகளை நடத்த அவர்களுக்கு பூரண உரிமை கொடுக்கப்படவேண்டும்.

(ஊ) இந்தியா பாகிஸ்தானுடன் காஷ்மீர் இணைப்பு பிரச்னை பாரபட்சமற்ற முறையில் பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் தீர்க்கப்படுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்க

வேண்டும். அதற்காக காஷ்மீர் மக்களின் பிரதிநிதித்வமுள்ள இடைக்கால சர்க்கார் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

(எ) இந்நிலையில் பாதுகாப்பு கவுன்ஸில் மேற்பார்வையின் கீழ் உடனடியாக பொதுஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டியது அவசியம்.

இதற்குமுன் பிப்ரவரி 6-ல் மிஸ்டர் கோபாலசாமி அய்யங்கார் இந்தியா சார்பில் கீழ்கண்ட சுருக்கமான இரண்டு தீர்மானங்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தார்.

**இந்தியாவின் புதிய தீர்மானம்** பிப்ரவரி 6.

1. காஷ்மீர் யுத்தம் நிறுத்தப்படுவதற்கு அறிகுறியாக பாகிஸ்தான் படையெடுப்பாளருக்கு வழிவிடாமல் இருக்கவேண்டுமென கவுன்ஸில் தீர்மானிக்கின்றது.

2. யுத்தம் நின்றபிறகு கீழ்வரும் இரண்டு விஷயங்களுக்காக கமிஷன் நியமிக்கப்படவேண்டும்.

(அ) காஷ்மீரில் பிரதிநிதித்துவம் வாய்ந்த சுதந்திர சர்க்கார் ஏற்படுத்துதல்.

(ஆ) இந்தியா பாகிஸ்தான் இரண்டில் ஒன்றுடன் காஷ்மீர் இணைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தல்.

3. கவுன்ஸில் நியமிக்கும் கமிஷனின் ஆலோஜனை மேற்பார்வையின் கீழ் பொதுஜன வாக்கெடுக்க வேண்டுமென கவுன்ஸில் சிபார்சு செய்கின்றது.

இந்தியா பாகிஸ்தானுக்கிடையே சமரசம் ஏற்படுத்த சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்களும், ஆலோஜனைகளும் இவையே. பாதுகாப்பு கவுன்ஸிலின் போக்கு இந்தியாவுக்கு எதிராக இருந்ததால் மிஸ்டர் அய்யங்காரும், இரண்டு சகாக்களும் கலந்தாலோசிக்க இந்தியா திரும்பினர். அச்சமயம் நிலைமையை சமாளிக்க டில்லி அரசியல் வட்டாரங்களில் இரண்டே அபிப்பிராயங்கள் இருந்தன.

1. பண்டித ஜவஹர்லால் நேருவே கவுன்ஸிலுக்கு நேரில் செல்லவேண்டும்.

2. பாதுகாப்பு கவுன்ஸில் விழிப்படையும் வகையில் இந்தியா காஷ்மீர் போர்முனையில் வெற்றி பளிக்கத்தக்க கடுந்தாக்குதலை நடத்தவேண்டும்.

இன்று காஷ்மீர் அரங்கம் பாதுகாப்பு கவுன்ஸிலையும் பாகிஸ்தானையும் விழிப்படையச் செய்துவிட்டது. ஆயினும் அது போதாது. நம்முடைய பிரதிநிதிகள் வெற்றிமாலையுடன் தாய்நாடு திரும்புவதும், எதிரிகளுக்கு புத்தி புகட்டுவதும் காஷ்மீர் அரங்கத்தில் நாம் நடந்துகொள்வதைப் பொறுத்தேயிருக்கிறது.

# பாகிஸ்தானில் வெள்ளையர் ஆட்சி

## ஹிந்து, சீக்கிய சொத்து கையாட்களுக்கு மாகாண சர்க்கார் தானம்.

—[எல்லை காந்தி பாதுஷாகான்]—

கராச்சி, 13, மார்ச், 1948

"பட்டாணியர்களுக்கு எதிராக விஷமத்தனமான அர்த்தமற்ற பொய் பிரசாரம் செய்வதையே பாகிஸ்தானிலிருக்கும் நம் விரோதிகள் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். முதலாளித்துவபிற்போக்குவாதிகளின் ஆதிக்கவலையில் பட்டாணியர்களை வைத்திருப்பதே அதன் நோக்கம். பாகிஸ்தான் பொதுமக்களின் வறுமை நீங்கவேண்டுமென்றே குதாயீ கித்மத்கார்கள் விரும்புகின்றனர். அஹிம்சா பூர்வமாக இடைவிடாது அதற்காக பட்டாணியர்கள் உழைத்துவருவர்." கராச்சி கிமாரி துறைமுகத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் எல்லைப்புற காந்தி பாதுஷாகான் மேற்கண்டவாறு பேசினர்.

பட்டாணியர்கள் தங்கள் எதிர்காலத்தைக் குறித்து கவலைப்படுகின்றனர். விழித்துக்கொண்டிருக்கும் ஜனநாயகவாதிகளானவீரமிகுந்த பட்டாணியர்கள் தங்களை கவிழ்த்துவிடக்கூடும் என்று முதலாளித்துவ பிற்போக்குவாதிகள் பயப்படுகின்றனர். வெள்ளையர்களை எதிர்த்து சுதந்திரத்திற்காக போராடியவர்கள், இந்திய முஸல்மான்களில் பட்டாணியர்களேயாவர். அதன் மூலமாகத்தான் இன்று பாகிஸ்தான் ஏற்படுவது சாத்தியமாயிற்று. பாகிஸ்தான் அரசாங்கத்தில் ஆதிக்கம் வகிக்கும் முதலாளித்துவகோஷ்டி பட்டாணியர்களைக் கண்டு நடுங்குகின்றது. பட்டாணியர்கள் சுயநலக்காரர்களாக இல்லாமல் இருப்பதும் தேசத்தின் நலனுக்காக எவ்வித துன்பங்களையும் சகிக்கத்தயாராய் இருப்பதுமே அதற்குக் காரணம்.

இந்தியப் பிரிவினையை நான் கடுமையாக எதிர்த்தேன். பிரிவினையின் பலாபலன்கள் இன்று பார்த்தாய் விட்டது. ரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின. வர்ணிக்க முடியாத துன்பங்கள் வந்தன. லக்ஷக் கணக்கான மக்கள் வீடிழந்தனர். இருப்பினும் பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு அதனுடைய லாபநஷ்டத்தை என்னுடைய லாப நஷ்டமாகவே பாவித்தேன்.

எல்லைப்புறம், பஞ்சாப், ஸிந்து, பலுஜிஸ்தானத்தில் ஹிந்து, சீக்கியர்கள் விட்டுச் சென்ற சொத்துகளை அநேகமாக தங்களை ஆதரிக்கும் முஸ்லிம்களுக்கே மாகாண சர்க்கார்கள் பகிர்ந்து கொடுத்திருக்கின்றன. சட்டப்படி அந்த சொத்துக்கள் சர்க்கார் மேற்பார்வையின் கீழ் இருந்திருக்கவேண்டும் அல்லது இந்தியாவிலிருந்து வந்த அகதிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பாகிஸ்தான் ஏற்படுவதற்குமுன் பாகிஸ்தானில் இஸ்லாமிய ஜனநாயக ஆட்சி அமையும் என்றும் நீதி, சமத்துவத்தின் உயரிய லட்சியங்களே அதன் குறிக்கோள் என்றும் பட்டாணியர்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால் பாகிஸ்தான் ஏற்பட்டபிறகு நடந்ததென்ன? வெள்ளையாட்சியின் அதிகார வர்க்கத்திற்கும், பாகிஸ்தான் அதிகாரவர்க்கத்திற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. பழைய ஊழல்களும், சூழ்ச்சிகளும் நிர்வாக சீர்கேடும் அப்படியே இருந்து வருகின்றது. உண்மையில் இன்று வெள்ளை அதிகாரிகளின்பிடி முன்பு இருந்ததைவிட பலமடைந்துள்ளது.

இதனால் பட்டாணியர்கள் தங்கள் எதிர்காலத்தைக் குறித்து கவலையடைந்திருக்கின்றனர். பாகிஸ்தானில் தங்களுடைய அந்தஸ்து என்னவென்று அறிய அவர்கள் விரும்புகின்றனர். உண்மையாகவே பட்டாணியர்களுடன் சகோதரப்பான்மையுடன் நடந்துகொள்ள விரும்பினால் பாகிஸ்தான் நிர்வாகத்திலும் இதர விஷயங்களிலும் பட்டாணியர்கள் இடம்பெற வேண்டும்.

இந்தியாவில் கவர்னர்கள் நியமிக்கப்படும் முறைக்கு நேர்மாறாக பட்டாணியர்கள் விரும்பாத ஒரு ஏகாதிபத்தியவாதி எல்லைப்புற கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இதனால் பாகிஸ்தானில் தங்களுடைய நிலை என்ன என்று கவலைகொள்ள பட்டாணியர்கள் நிர்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். பட்டாணியர்களுக்கு சமத்துவம் வழங்கப்படுமா அல்லது அடிமைகளாக வைக்கப்படுவார்களா? இன்று பாகிஸ்தானில் பட்டாணியர்களுக்கு எதிராக நடக்கும் விஷமப் பிரசாரத்தின் நோக்கம் என்ன?

பட்டாணியர்களிடம் ராணுவமில்லை. தளவாடங்கள் இல்லை. பெரிய லீடர்கள் இல்லை. பொருளாதாரத் துறையில் நாம் ஏழைகள். இருந்தும் முஸ்லிம் லீகும், லீக் பத்திரிகைகளும் பட்டாணியர்கள் பாகிஸ்தானுக்கு நஷ்டம் விளைவிக்கப்பார்க்கின்றனர் என்று விஷமத்தனமான பொய் பிரசாரம் நடத்துகின்றன.

பாகிஸ்தான் பொதுமக்களின் வறுமையைப் போக்க அஹிம்சா பூர்வமாக முயற்சிப்பதைத் தவிர, குதாயி கித்மத்கார்களுக்கு வேறொன்றும் தெரியாது.''

பாதுஷாகான் பஷ்துவில் பேசியதை பலூஜ் தலைவர் கான் அப்துல் சமத் கான் உருதுவில் மொழிபெயர்த்தார். பாதுஷாகான் பேச்சுக்கு பதிலளிக்க முன் வந்த ஒரு லீகரின் அதிகப் பிரசங்கித்தனத்தை கண்டிக்கும் தோரணையில் ஜனங்கள் எழுந்து சென்றுவிட்டனர்.

திங்களன்று பாதுஷாகான் பெஷாவர் பிரயாணமானார். 30 செஞ்சட்டைத் தொண்டர்கள் தங்களுடைய சொந்த செலவில் எல்லை காந்தியின் மெய்க்காப்பாளர்களாக இருந்துவருகின்றனர். எல்லைப்புறத்திலும் அவர்கள் மாறி மாறி பாதுஷாகான் வீட்டைக் காவல் காக்கின்றனர். பாதுஷாகான் ஏதாவது இயக்கம் ஆரம்பிக்கும்பொழுது இந்தக் காவல் தீவிரமடைவது வழக்கம். பல தடவைகளில் ஆயுதந்தாங்கி பாதுகாப்பதை அஹிம்சைக்கு விரோதமென்று பாதுஷாகான் மறுத்தும் தொண்டர்கள் அதை விடுவதில்லை. கூட்டத்திற்கு தலைமை வகித்த பட்டாணிய பிரமுகர் பாதுஷாகான் தேசத்திற்கும் பட்டாணியர்களுக்கும் செய்த தியாகங்களைப் பாராட்டி அறியாமை படுகுழியிலிருந்து பட்டாணியர்களைமீட்டு சுதந்திர ஆர்வத்தை ஊட்டிய 'பட்டாணியப் பெருந்தகை' என்று குறிப்பிட்டார்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அகட்டிக் கொண்டிருக்கின்றது. ஆகையால் உலக சுதந்திரம், ஜனநாயகமென்று அமெரிக்கா கூச்சல் போடும்பொழுது அதனுடைய சாம்ராஜ்யத்திற்கு அபாயம் ஏற்பட்டிருக்கின்றது என்பதே அதற்கு அர்த்தம். உண்மையில் வல்லரசுகள் நடிக்கின்றன. சுதந்திரம், ஜனநாயகமென்று கோஷித்து உலகத்தை மீண்டும் அழிவுப்படுகுழியில் தள்ளிவிட்டு தங்களுடைய சாம்ராஜ்ய லட்சியங்களை அடைய விரும்புகின்றன. இந்தியா சம்மந்தப்பட்டவரை அதற்கு சாம்ராஜ்ய ஆசை எதுவுமில்லை. எனவே நாம் ரஷ்யாவுடன் சேரவோ அமெரிக்காவை ஆதரிக்கவோ மாட்டோம்.

# உலகத்தின் யுத்தப் போக்கு

இரண்டு சர்வதேச யுத்தங்களில் பல லக்ஷம் மக்களை அழித்த பிறகும், ஐரோப்பிய அமெரிக்க அரசியல் வாதிகள், மனித வர்க்கத்தை, யுத்தத்தின் அழிவு வழியில் மீண்டும் இழுத்துச் செல்ல முயற்சிக்கின்றனர். பிரிட்டனும், பிரிட்டனின் ராணுவ சக நாடுகளும், அமெரிக்க அரசியல் வாதிகளும், இன்று செய்துவரும் காரியங்களே அதற்குப் போதிய அத்தாட்சியாகும். பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், லக்ஜம்பர்க், மேற்கு ஜெர்மனியுடன் சேர்ந்து, பிரிட்டன், யூனியன் ஒன்று அமைத்துக்கொண்டிருக்கிறது. இந்த யூனியனில் துருக்கி, கிரீஸ், ஸ்பெயின், இத்தாலி, போர்ச்சுகல், நார்வே, டென்மார்க், ஸ்வீடன் முதலிய நாடுகளை சேர்க்க அநேகமாக முயற்சிகள் நடக்கலாம். ஐரோப்பிய அரசியலில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை, பலத்தைக்கொண்டு தடுப்பதே இந்த யூனியனின் நோக்கம். ஐரோப்பாவில் கம்யூனிஸம் பரவுவதற்கு, ரஷ்யாவின் முயற்சிகளும் ஓரளவு காரணமாக இருக்கலாம். ஆயினும் ஐரோப்பாவில் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவை போக்குவதில் காட்டப்படும் அலட்சியமே, கம்யூனிஸம் பரவுவதற்கு முக்கிய காரணமாகும். இந்நிலைமையை பிரயோஜனப்படுத்திக்கொண்டு, கடன் கொடுத்து உதவி செய்யும் திரைமறைவில், அமெரிக்கா தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள முயற்சிக்கின்றது. மார்ஷல் திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் உதவி, ஐரோப்பிய நாடுகளின் அரசியல், பொருளாதாரத்தின்மீது, ஆதிக்கம்பெற நடக்கும் முயற்சியைத் தவிர வேறொன்றுமில்லை. எனவே, அமெரிக்க சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி, மக்களைத் தன் பக்கம் திருப்ப, ரஷ்யாவுக்கும் சந்தர்ப்பம் கிடைத்துவிடுகின்றது. வளர்ந்து வரும் ரஷ்ய செல்வாக்கை, பிரிட்டன், அமெரிக்கா தங்களுக்கு அபாயமென்று நினைப்பது இயற்கையே. அவ்வித அபாயத்தை தவிர்ப்பதற்காகவே மேற்கு ஐரோப்பிய நாடுகளின் யூனியன் அமைக்கப்பட்டுள்ளது.

பகிரங்கமாக அமெரிக்கா நடவடிக்கையில் இறங்கிவிட்டது. பிரஸிடெண்ட் ட்ரூமன் கட்டாய ராணுவ பர்தி, கட்டாய ராணுவ பயிற்சி, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் யூனியனுக்கு ராணுவ உதவி பிரகடனம் செய்துவிட்டார். சமீபத்தில் அவர் செய்த பிரசங்கத்தில் ரஷ்ய அபாயம் ஒன்றைத் தவிர வேறொன்றுமில்லை. "அமைதியை ஏற்படுத்துவதில் ஒத்துழைக்க மறுத்ததுமின்றி அதைத் தடுக்கவும் ஒரு நாடு முயற்சித்து வருவதே ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குக் காரணம். அது மட்டுமல்ல. யுத்தம் முடிந்த பிறகு ரஷ்யாவும், ரஷ்ய ஏஜண்டுகளும், மத்திய, கிழக்கு, ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர்." என்றுகூட பிரஸிடெண்ட் ட்ரூமன் பேசிவிட்டார். ரஷ்யா தன் கட்சியை தெளிவுபடுத்துவது ஒருபுறமிருக்கட்டும். பிரிட்டனும் அமெரிக்காவும் ஜனநாயகத்தை நிலைநிறுத்த இதுவரை என்ன செய்திருக்கின்றனர்? என்று கேட்கமுடியும். இந்தோனேஷியர்களின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கியவர்கள் யார்! இந்தோ சைனாவை அடிமையாகவே இருக்க நிர்ப்பந்திப்பவர்கள் யார்? கிரீஸில் பாஸிஸ்டுகளை ஆதரித்தவர்கள் யார்? தென் ஆப்பிரிக்காவில் ஸ்மட்ஸ் பாஸிஸ்டுகளுக்கு எதிராக மௌனம் சாதிப்பவர்கள் யார்? உதவியின் பெயரால் ஈரானை அடிமைப்படுத்துகின்றவர்கள் யார்? பாலஸ்தீனத்தில் கலகங்களை தூண்டிவிட்டு ரத்தம் சிந்த செய்கின்றவர்கள் யார்? இன்று மேற்கு ஐரோப்பிய யூனியனை அமைத்து குடியேற்ற நாடுகளை அடிமையில் ஆழ்த்திவைக்க சூழ்ச்சி செய்யும் சக்திகள் எவை? இன்று காஷ்மீர் பிரச்னை உலகத்தின்முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் கொள்ளைக்காரர்களுக்கு அமெரிக்காவும், அதனுடைய சகாக்களும் ஆதரவளிப்பது உண்மையல்லவா? சுதந்திரம், ஜனநாயகம் இவைகளைக் குறித்து பேசும் பிரிட்டன், அமெரிக்கா முதலிய இதர நாடுகளின் மனப்பான்மை இவ்விதமிருக்கையில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் காக்க செய்யப்படும் யுத்த பிரகடனம் அர்த்தமற்ற மோசடியைத் தவிர வேறென்ன? ஹிட்லர் தர்பாரின் நாஸிகளுடன் ஒத்துழைத்தவர்களை கிரீஸில் அமெரிக்கா ஆதரிப்பதன் காரணமென்ன? ஸ்பெயின் போர்ச்சுகளிலுள்ள பாஸிஸ்டுகளை தட்டிக் கொடுப்பதன் நோக்கமென்ன? இவ்விரு நாடுகளும் ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் உதவி செய்யவில்லையா?

ரஷ்யாவை இம்பீரியலிஸ்ட் என்றால் அமெரிக்காவும் பிரிட்டனும் அதைவிட குறைந்தவையல்ல. இன்று ஐரோப்பாவில் ரஷ்யா இடம் பெற முயற்சிக்கின்றது என்றால் அமெரிக்கா இதற்கு முன்பே பல ஆயிரம் மைல்கள்வரை தன்னுடைய கால்களை

(9-ம் பக்கம் பார்க்க.)

# இதுவா இஸ்லாமிய ஆட்சி!

நண்பர் S. R. பாஷா திருச்சியை சேர்ந்தவர். போஸ்ட் & டெலிகிராப் டிபார்ட்மெண்டில் மாதம் ரூ. 100 உத்தியோகத்திலிருந்தார். முஸ்லிம் லீக் பிரசாரத்தில் மயங்கி பாகிஸ்தானுக்கு சென்று, ஏறக்குறைய 5 மாதங்கள் வரை தங்கி வேலை பார்த்து அலுத்துப்போய் திரும்பியிருக்கின்றார். அங்கு நேரில் கண்டவைகளை தென்னாட்டு முஸ்லிம்களுக்கு ஒளிவு மறைவின்றி எடுத்துச்சொல்ல முன்வந்திருக்கின்றார். இஸ்லாமிய ராஜ்யக்கனவில் லயித்திருப்பவர்களுக்கு உண்மை உணர்த்துவதே அவர் நோக்கம். அதைக் கடமையாகவே பாவிக்கின்றார் என்பது அவர் நமக்கு எழுதிய கடிதத்திலிருந்து விளங்குகின்றது. "இன்று உங்களுடைய பத்திரிகையை தொடர்ந்து பார்த்து வருகின்றேன். அன்று உங்கள் பேச்சு என் காதுகளில் ஏறவில்லை. அப்பொழுது என் தலைமீது பாகிஸ்தான் பிசாசு ஏறியிருந்தது." என்று அக்கடிதத்தில் எழுதியிருப்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

நண்பருடைய நேர்மையை நாம் மெச்சுகின்றோம். பாகிஸ்தானிலும் இருக்கமுடியாமல் இந்தியாவிலும் வேலையை இழந்து தவிப்பவர்களின் நிலைமை அனுதாபத்திற்கு உரியது என்பதில் சந்தேகமில்லை. ஏகாதிபத்திய பின் பலத்துடன் நடந்த லீக் பிரசார விளைவுகளில் இதுவும் ஒன்று. இருநூறு வருஷ ஏகாதிபத்திய ஆட்சியின் விளைவுகளுக்கு இலக்கானவர்களில் அவர்களையும் சேர்த்து இந்திய சர்க்கார் அவர்கள் விஷயத்தில் கருணை காட்டுமென்று நாம் நம்புகிறோம். பாகிஸ்தான் இஸ்லாமிய ஆட்சி மோகத்தில் வேலை இழந்து தவிக்கும் முஸ்லிம்கள் நண்பர் S.R. பாஷாவைப் பின்பற்றி பாகிஸ்தானில் தாங்கள் நேரில் கண்டவைகளை இங்குள்ள முஸ்லிம்களுக்கு எடுத்துச் சொல்வதன் மூலம் பிராயச்சித்தம் செய்ய முன்வரும்படி அழைக்கின்றோம். "பாகிஸ்தான் டைரி" என்ற தலைப்பின்கீழ் அவர் எழுதியிருப்பதைப் பார்த்த பிறகு எந்த ஒரு முஸ்லிமும் பாகிஸ்தான் அனுதாபியாக இருக்க முடியாது என்பது திண்ணம்.

— ஆசிரியர்.

ஜெய்ஹிந்த் ! ஹம் ஏக் ஹை !! அல்லாஹு அக்பர் !!!

# பாகிஸ்தான் டைரி.

இக்கட்டுரை எழுதுவதற்கு முன் என் அன்பு மிக்க முஸ்லிம் சகோதரர்களிடம் ஓர் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். நான் இக்கட்டுரையில் பாகிஸ்தானிற்குச் சென்றிருந்தபோது அங்கு கண்ட சில திருவிளையாடல்களை வெளியிட ஆசைப்படுகின்றேன். ஆதலால் என் முஸ்லிம் தோழர்கள் என்மீது ஆத்திரங் கொள்ளாமல் குளிர்ந்த மனதுடன் சில நிமிஷங்கள் உட்கார்ந்து நன்றாக யோசித்து அலசிப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டு விஷயத்தை ஆரம்பிக்கின்றேன்.

என் கப்பல் "எக்மா" அக்டோபர் மாதம் 5-ந்தேதி மாலை 4-மணிக்கு கராச்சி துறைமுகம் அடைந்தது. பிறகு கப்பலிலிருந்து இறங்கி "பாகிஸ்தான் லாட்ஜி"ல் தினம் ரூ. 2 வீதமாக வாடகை செலுத்தி தங்கியிருந்தேன். இரவு சாப்பாட்டுக்கு ஓர் ஹிந்து ஹோட்டலுக்குச் சென்றிருந்தேன். அங்கு வேலையாட்கள் எல்லாம் சாதாரணமாக மதத் துவேஷமின்றி நல்லவிதமாகத்தான் நடந்துகொண்டனர் சாப்பிட்ட பிறகு வெளியில் வந்தேன். ஓர் முஸ்லிம் பெரியார் என்னை சந்தித்தார். நல்ல பருமனான தேகம். பெரிய மீசை, ஒரு சாண் நீளத்திற்கு தாடி, தலையில் தலைப்பாகை. கையில் தடியுடன் நின்றுகொண்டிருந்தார். அவர் என்னைக் கண்டதும் "யார் நீ ?" என்று கேட்டார். நான் திடுக்கிட்டேன். பிறகு "நீ ஓர் முஸ்லிமா ?" என்று கேட்டார். நான் அதற்கு பயந்துகொண்டே "அல்ஹம்து லில்லாஹ்" (ஆம்) என்று பதில் சொன்னேன். அதற்கு அவர் "இனி ஹிந்து ஹோட்டல்களில் சாப்பிடாதே" என்று கூறினார். அதற்கு நானும் 'சரி' என்று ஒப்புக்கொண்டேன். பிறகு என் ஊர், விலாசம் முதலியவைகளைக் கேட்

டார். அவர் கேட்டதற்கு நானும் நிதானமாக பதில் கூறினேன். இப்படியே பேசிக்கொண்டிருக்கும் போது கேமாரி (Keamari) செல்லும் டிராம் வந்தது. போய்விட்டு வருகின்றேன் என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். நானும் அவருக்கு அஸ்ஸலாமு அலேக்கும் என்று சொல்லி எழுந்திருந்து பெஞ்சிமேல் வைத்திருந்த தொப்பியை தேடினேன். அது காணவில்லை. அந்த முஸ்லிம் பெரியார் டிராமின் முன் பாகத்தில் டிரைவரின் அருகில் நின்றுகொண்டு என் தொப்பியை கையில் வைத்திருந்ததைக் கண்டேன். அவரும் சிரித்துக்கொண்டே (Cheerio) 'சீரியோ' என்ருர். டிராமும் நகர்ந்தது நானும் ஏமாற்றத்துடன் "வாஹ்ரே பாகிஸ்தான்" என்று சொல்லிக்கொண்டு என் இருப்பிடம் சென்றேன். இது நான் பாகிஸ்தான் எல்லையில் கால் வைத்த முதல் நாள் சம்பவமாகும்.

அடுத்த நாள் சாயந்திரம் 5-மணிக்கு சினிமா பார்ப்பதற்காக வெளியில் கிளம்பினேன். சதர் (Saddar) பஜாரில் போய்க்கொண்டிருக்கும்போது சுமார் 16 அல்லது 17 வயதுள்ள ஒரு சீக்கிய வாலிபன்மீது ஓர் டாங்காகாரன் தன் டாங்காவை ஏற்றிவிட்டான். உடனே கூட்டம் கூடியது. பீட்டில் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரனும் ஸ்தலத்திற்கு ஓடிவந்தான். டாங்காகாரனை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டான் டாங்கா டிரைவரும் தன் வண்டியில் ஏறினன். பிறகு போலீஸ்காரன் டாங்காகாரனுடைய பெயரைக் கேட்டான். அவன் பெயர் ஒரு முஸ்லிம் பெயராக இருந்தது உடனே போலீஸ்காரன் டாங்காகாரனைக் கூப்பிட்டு இனிமேல் இப்படிச்செய்யாதே என்று அதட்டிவிட்டு போகச்சொல்லிவிட்டான். பிறகு மற்றொரு டாங்காவை கூப்பிட்டு அந்த சீக்கிய வாலிபனை வீட்டுக்கு அனுப்பிவிட்டான். அங்கு நின்றுகொண்டிருந்த என் சிநேகிதர்களில் ஒருவர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி சொன்னர். அதற்கு அந்த போலீஸ்காரன் "பாகிஸ்தான் ஆஸ்பத்திரிகளில் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு கொடுப்பதற்கு மருந்தில்லை" என்று அங்கு கூடியிருந்த சுமார் 100 பேர்களின் முன்பு பகிரங்கமாக கூறினன் இதைக் கேட்ட என் உள்ளம் பதறிற்று. ஆனல் ஒன்றும் செய்யமுடியவில்லை அடுத்த நாள் அந்த சீக்கிய வாலிபன் இறந்துவிட்டதாகப் பாகிஸ்தான் பேப்பர்களிலேயே கண்டேன்.

தோழர்களே! பாருங்கள்! ஓர் போலீஸ்காரன்! ஓர் உயிரைக் காப்பாற்றவேண்டியவன்! குற்றம் செய்துவிட்டு ஓடும் குற்றவாளியைக் கண்டு பிடித்து தண்டனை கொடுக்கவேண்டிய ஓர் உத்தியோகஸ்தன்! குற்றவாளி அகப்பட்டும் அவன் ஒரு முஸ்லிமாக இருந்ததால் தண்டனை அடைவதற்கு பதிலாக, ஜாதி வித்தியாசத்தால் விடுவிக்கப்பட்டதைக்காணும்போது பாகிஸ்தான் ஓர் இஸ்லாமிய நாடுதானு அல்லது இஸ்லாமிய நாட்டிற்கும், அரசாட்சிக்கும், முஸ்லிம்களின் கௌரவத்திற்கும் பங்கம் விளைவிக்கும் நாடா! என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

அதற்கு அடுத்த நாள் காரச்சி துறைமுகத்திற்கு சென்றிருந்தேன். அச்சமயம் ஸிந்து மாகாணத்திலுள்ள ஹிந்து அகதிகள் வெளியேறும் கப்பல் புறப்பட தயாராய் இருந்தது. கப்பலில் சாமான் ஏற்றுவதற்குமுன்பு துறைமுகத்தின் போலீஸ்காரர்கள் அகதிகளின் சாமான்களை சோதனை செய்தனர். ஹிந்து அகதிகள் தையல் மிஷின், சைக்கிள், டேபிள் பான் (Table Fan) போன்ற மெஷனரி சாமான்கள் வைத்திருந்தனர். அவைகளை எல்லாம் அந்த பாகிஸ்தான் போலீஸார் கைப்பற்றிக்கொண்டனர். ஆனல் நான் பம்பாயில் பாகிஸ்தானுக்குப் புறப்பட கப்பல் ஏறும்போது நம்மவர்களில் அநேகர் மேற்சொன்ன மெஷினரி சாமான்களை வைத்திருந்தனர். அது மாத்திரமல்ல! துப்பாக்கி, பிஸ்தோல், ரிவால்வர் முதலியவைகள்கூட வைத்திருந்தனர். மெஷினரி சாமான்கள் வைத்திருந்தவர்களிடம் சாமான் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் டிக்கட் போட்டு அச்சாமான்களைக்கொண்டுசெல்ல அனுமதித்தனர். துப்பாக்கி, பிஸ்டோல், ரிவால்வர்கள் வைத்திருந்தவர்களிடம் லைசென்ஸ் இருந்தால் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டது. லைசென்ஸ் இல்லாதவர்களுடைய துப்பாக்கிகளும், ரிவால்வர்கள் மாத்திரமே பிடுங்கிக்கொள்ளப்பட்டன. ஆனல் பாகிஸ்தானில் லைசென்ஸ் வைத்திருந்தவர் வைக்காதவர்கள் எல்லோரிடமிருந்தும் கைப்பற்றப்பட்டன. மெஷினரி சாமான்கள் கொண்டு செல்லவும் அனுமதிக்கப்படவில்லை.

நான் இங்கு ரிவால்வர், பிஸ்டோல், துப்பாக்கி முதலிய சாமான்களைப்பற்றி அவ்வளவு அக்கரையாக கூறவில்லை. ஆனல் ஓர் ஏழை, சைக்கிள் தொழிலாளி, சைக்கிள்களை ரிப்பேர் செய்து வயிறு வளர்க்கும் அந்த ஏழையினுடைய அச்சாமான்களைக் கைப்பற்றினரே அதைத்தான் கூறுகிறேன். தோழா! பதருமல் சிறிது யோஜித்துப்பார். அத்தொழிலாளி அச்சாமான்களின்றி இந்திய டொமினியனில் குடியேறியும் என்ன வசதி ஏற்படக்கூடும். அச்சாமான்களை அந்த ஏழையிடம் பாகிஸ்தான் அரசாங்கத்தார் கொடுத்துவிட்டால் அவர்களுக்கு ஏற்படும் நஷ்டமென்ன? இவைகளெல்லாம் வேண்டுமென்று செய்யக்கூடிய அட்டூழியங்கள். இவ்வித அட்டூழியங்களில் துறை

# சென்னை மாகாண முஸ்லிம்களின் அபாய நிலை.

## நல்வழி காட்டத்தவறிய லீக் கௌன்ஸில்

### ஜனுப் A. M. அல்லா பிச்சை அறிக்கை.

1948 மாரச்சு 10ம் தேதி கூடிய முஸ்லிம் லீக் கவுன்ஸில் தேசத்திற்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் பெரும் அபாயத்தை உண்டாக்கியிருக்கிறது. அது ஹிந்துமஹாசபையின் கையை ஓங்கச்செய்துவிட்டது. முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களும், அவரை பின் பற்றுபவர்களும் இதை புரிந்துகொண்டு தன்னுடைய தவறை திருத்திக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். அஸ்ஸாம், பெங்கால், யு. பி, பஞ்சாப் முதலிய மாகாணங்களுக்கு லீகுடன் ஒருவித தொடர்பும் இல்லை. மற்ற மாகாணங்கள் மார்ச்சு 10ந் தேதி கூடிய கவுன்ஸிலில் கலந்து கொள்ளாததின் மூலம் லீகை பகிஷ்கரித்தன. அரசியல் நிர்ணய சபை முஸ்லிம் மெம்பர்கள் சிலர் லீகின் போக்கை கண்டித்து சில நாட்களுக்கு முன்னால் வெளியேறினார்கள். கண் முன்னால் தெரியும் உண்மைகளை அறிந்து முகம்மது இஸ்மாயில் சாஹிப் லீகைக் கலைத்து முஸ்லிம்களுக்குச் சரியான வழிகாட்டியிருக்க வேண்டும். லீகின் தீர்மானம் துரதிர்ஷ்டம்கொண்ட இந்நாட்டில் ஹிந்துமஹாசபை போன்ற வகுப்புவாத ஸ்தாபனங்களையும் பலப்படுத்திவிட்டது. சில சட்டசபை மெம்பர்களும் தங்கள் தவறை உணர்ந்து லீகிலிருந்து விலகிவிட்டார்கள். இந்திய யூனியனை நியாயம், ஒற்றுமை, ஜனநாயகம் இவைகளை அடிப்படையாகக் கொண்ட, வகுப்புவாதமற்ற நாடாக ஆக்குவதன் மூலம் முஸ்லிம்களைக் காப்பாற்றியாக வேண்டும். தனக்கு முஸ்லிம்களின் ஆதரவு கிடையாதென்பதை லீக் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. லீக் ஸ்தாபனம் இன்னும் சில வாரங்களில் இந்திய யூனியனிலிருந்து மறைந்துவிடும் என்பது தெளிவு.

இன்னும் காலம் கடந்துவிடவில்லை. தவறான வழியில் இழுத்துச்செல்லப்படும் முஸ்லிம் சகோதரர்களை காப்பாற்றவேண்டும். லீகின் தற்கால போக்கிலுள்ள அதிருப்தியை வெளிப்படுத்தும்படி மாகாணம் பூராவிலும் உள்ள ஒவ்வொரு முஸ்லிமையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். லீக் சகோதரர்கள் தங்களுடைய சட்டசபை பதவிகளை ராஜிநாமா செய்ததே முஸ்லிம்களுக்கு செய்த பெரிய சேவையாகும்.


உங்கள் வியாபாரம் விருத்தியடைய

**ஆஸாதில்**

விளம்பரம் செய்யுங்கள்.


(12-ம் பக்கத் தொடர்ச்சி)

முகத்திலுள்ள எல்லா போலீஸ் உத்தியோகஸ்தர்களும் கலந்துள்ளனரே! இதைப்பற்றி ஏன் யாரும் கவலைப் படுவதில்லை.

இவ்வாறு எத்தனை ஏழைகளின் குடும்பங்கள் பாழாயினவோ! கடவுளுக்குத்தான் தெரியும்.

இந்தத் திருவிளையாடல்களெல்லாம் கராச்சியில் (பாகிஸ்தான் தலைநகர்) தங்கிய நான்கு நாட்களில் கண்டவைகளாகும்.

இனி லாகூர் செல்வோம். (தொடரும்)


**"ஆஸாத்"**

**(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை)**

தற்கால அரசியல் அறிவு வளர்ச்சி யடைய அவசியம் படிக்கவேண்டும். சிக்கலான அரசியல் உலகத்தில் இன்று 'ஆஸாத்' சமூகத்தை நேரான பாதையில் முன்னேறச் செய்கிறது. சொற்ப காலத்தில் புது அரசியல் உணர்ச்சியை எங்கும் உண்டாக்கியிருப்பதை தாங்கள் கவனித்திருக்கலாம். உங்கள் ஊரில் 'ஆஸாத்' ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. 'ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ. 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்,

**"ஆஸாத்"**

கும்பகோணம்.

சென்ற வாரத் தொடர்ச்சி.

# —: புனர் வாழ்க்கை. :—

—(o)—

## லக்னோ மஹாநாடு

1947 டிஸம்பர் 28 நடுப்பகல் 12½ மணிக்கு முஸ்லிம் லீக் வகுப்புவாத அரசியல் பிணம் ஜனாஸா (பாடை) வில் வைக்கப்பட்டது. இமாமுல் ஹிந்த் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஜனாஸா தொழுகை நடத்தி வைத்தார். இந்திய முஸல்மான்கள் ஒரு லக்ஷம் பேர் கூடி சுமந்து கபரஸ்தானில் சேர்ப்பித்தனர். பின் யோஜனையுடன் 10 அடி ஆழச் சவக்குழியில் வைத்து மண்ணைப்போட்டு மூடினார்கள் சமாதி மீது "காய்தே ஆஜம் முகம்மது அலி ஜின்னா ஞாபகார்த்தம்" என்ற சொற்கள் பொரிக்கப்பட்டன.

தேசீய முஸல்மான்களை அழிக்க லீகர்கள் கையாளாமல் விட்ட வெறுக்கத்தகுந்த முறை எதுவும் பாக்கியிருக்கவில்லை. தேசீய முஸ்லிம் ஒருவர் சேர்க்கப்பட்டதால் இடிமுழக்கத்தைக்கேட்ட நாகம் போல் நடுங்கி மிஸ்டர் ஜின்னா சிம்லா மஹாநாட்டையே தோல்வியடையச் செய்துவிட்டதை லீகர்கள் அதற்குள் மறந்திருக்கமாட்டார்கள்.

இருப்பினும் தேசீய முஸல்மான்கள் எல்லாவற்றையும் மறந்து மன்னித்தனர். அடக்குவாரின்றிக் கிடந்த நாதியற்ற லீக் பிணத்தை அடக்கம் செய்து கடமையை நிறைவேற்றினர். எத்தனையோ தேசீய முஸ்லிம்களின் வீட்டுப் பிணங்கள் அழுகி நாற்றமெடுக்க காரணமாயிருந்த முஸ்லிம் லீக் பிணத்தை அழுகி நாற்றமெடுக்க விட்டுவைக்காமல் உடனடியாக அடக்கம் செய்தது தேசீய முஸல்மான்களின் தாராள மனப்பான்மைக்கும், பெருந்தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஸர் ஸையத் அஹமத் கானும், வெள்ளைப் பிரின்ஸிபால்களுமாக சேர்ந்து அலிகார் காலேஜில் பெற்றெடுத்து, ஸர் ஆகாகான், ஸர் முகம்மது ஷபீ, ஸர் பஸல் ஹுஸைன் அதற்கு முஸ்லிம் லீக் என்று பெயர் வைத்து, மௌலானா ஷவுகத் அலி, ஜபர் அலி கான், மௌல்வி ஷபீ தாவூதி தாலாட்டி, காஜா ஹஸன் நிஜாமி ரட்சை கட்டி, ஹைதராபாத் நிஜாம், போபால் நவாப் பொன்னும் மணியும் வாரியிறைத்து, ஸர் அல்லாமா இக்பால் சிகை அலங்கரித்து, மிஸ்டர் முகம்மது அலி ஜின்னா ஏழை மக்களின் உதிரத்தை ஊட்டி வளர்த்து வாலிபனாக்கி, ஷப்பீர் அஹமத் உஸ்மானி முடிசூட்டுவிழா நடத்தி, தேசீய முஸல்மான்களின் திருஷ்டி படாமல் இருக்க மந்திரங்கள் ஜெபிக்கப்பட்டு லக்ஷக்கணக்கான முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர்களை பலிகொடுத்து வளர்த்த லீக் வகுப்புவாதம் முடிவில் தேசீய முஸ்லிம்களாலேயே புதைக்கப்பட வேண்டுமென்பது விதி வசமோ! அல்லது இயற்கை தீர்த்துக் கொண்ட வஞ்சமோ!

லக்னோ மஹாநாடு கூடிய சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் உணராமல் மஹாநாட்டின் முக்கியத்துவத்தை உணர முடியாது. பிரிவினையின் பயங்கர விளைவுகள் இந்திய முஸல்மான்களை விழிப்படையச் செய்தன. எதிர் காலத்தைக் குறித்து ஒரு முடிவுக்கு வர முஸ்லிம்களுக்கு இருந்த ஆர்வத்தால் லக்னோ மஹாநாடு கூட்டப்பட்டது.

லார்டு வேவலின் சமிக்ஞை பெற்று முட்டுக் கட்டை போடும் கெடு புத்தியுடன் லீக் அங்கத்தினர்கள் இடைக்கால சர்க்காரில் பிரவேசித்திருந்தனர். எனவே அதை உண்மையான சர்க்கார் என்று சொல்லுவது தவறு கூட்டுப் பொறுப்புக்கு லீக் அங்கத்தினர்களிடம் உறுதி பெறாமல் இடைக்கால சர்க்காரில் அவர்களுக்கு இடமளித்த தவறை காங்கிரஸ் காலங்கடந்தே உணர்ந்தது. லீக் அங்கத்தினர்கள் இடைக்கால சர்க்காரை கிரியாம்சையில் அர்த்தமற்ற கேலிக்கூத்தாக்கிவிட்டனர். அதனால் பொதுவாக ஹிந்துக்கள் லீகர்களுக்கு இடமளித்த காங்கிரஸை வெறுக்க ஆரம்பித்தனர்.

நேர்மாறாக லீகர்களுக்கு கொண்டாட்டம். அவர்களுடைய வகுப்புவாதம் பலமடைந்தது. 1946 ஆகஸ்ட் 16-ல் நேரடி நடவடிக்கை நடத்தவும் துணிந்தார்கள். கல்கத்தாவில் ரத்தக்களரி ஆரம்பித்தது. அதையடுத்து நவகாளி, பீஹார், குர்முக்தேஸ்வர் சம்பவங்கள் நடந்தன, பீஹார் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும்போதே மிஸ்டர் ஜின்னா லண்டனுக்கு போக துடித்தார். மிஸ்டர் சர்ச்சிலின் கோரிக்கையால் கூட்டப்பட்ட லண்டன் கான்பரன்ஸில் மிஸ்டர் ஜின்னாவுக்கு சாதகமாக் முடிவு செய்யப்பட்டது.

இவ்விதம் லீக் வகுப்பு வாதத்துக்கு வெற்றிமேல் வெற்றியும், காங்கிரஸ் தேசீயத்திற்கு தோல்வி மேல் தோல்வியும் கிடைத்தன. வகுப்பு வாதத்திற்கு வகுப்புவாதத்தின் மூலம் பதிலளிக்கக் காங்கிரஸ் தயாராய் இல்லாமலிருந்ததே இதற்குக் காரணம். அப்படிச் செய்திருந்தால் காங்கிரஸ் தேசீயத்தை இழந்திருக்கும் என்பது உண்மையே. ஆயினும் ஹிந்துக்கள் பொறுமை இழந்தனர். செங்கல்லுக்கு கருங்கல்லால் பதிலளிக்க விரும்பிய ஹிந்துக்கள் சர்க்காரின் ஒன்றும் செய்யமுடியாத நிலைமையைக் கண்டு மனம் புழுங்கினர்.

இன்னொருபுறம் இடைக்கால சர்க்காரின் அர்த்த மற்ற தன்மையால் காங்கிரஸுக்கும் அலுப்பு தட்டி விட்டது. இவ்வித சூழ்நிலையை உண்டாக்கிவிட்டு வெள்ளையர்கள் ஜூன் 3ந்தேதி அறிக்கையை வெளியிட்டனர். அதில் நாட்டின் பிரிவினையுடன் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது பிரிவினைக்குப் பிறகு முஸ்லிம் லீக் வகுப்புவாதத்தை விட்டுவிடுமென்றும் இரண்டு டொமினியன்களிலும் சுதந்திர சூரியன் உதயமானபிறகு பரஸ்பர சச்சரவுகளை மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைப்பதில் முஸ்லிம் லீக் முனைந்துவிடும் என்றும் நம்பி பிரிவினைக்கு காங்கிரஸ் இணங்கிற்று. பிரிவினையை ஒப்புக்கொள்ளாமல் இடைக்கால சர்க்காரிலிருந்து வெளியேறி சுதந்திரத்துக்காக இறுதிப் போராட்டம் ஒன்றை காங்கிரஸ் நடத்தியிருக்கலாம். அதைவிட அமைதியான அதிகார மாற்றத்தை வரவேற்று மனக்கஷ்டத்துடன் காங்கிரஸ் பிரிவினையை ஏற்றுக்கொண்டுவிட்டது வகுப்பு வேற்றுமை வலுத்திருக்கும்போது போராட்டம் ஆரம்பித்தால் அது வகுப்பு கலவரங்களில் போய் முடியலாம் என்று காங்கிரஸ் நினைத்தது முற்றிலும் சரியே. அவ்வித அபாயத்தைத் தவிர்க்க காங்கிரஸ் முயற்சித்ததே பிரிவினையை ஏற்றுக் கொண்டதற்கு இரண்டாவது காரணமாகும்.

என்னதான் அந்தரங்க சுத்தியுடன் நடந்து கொண்டாலும் கலகப்பிரியர்கள் சும்மா இருக்க மாட்டார்கள் என்று நேர்மை மிகுந்த காங்கிரஸ் மஹாசபைக்கு தெரியாமலேயே போய்விட்டது. நாடு பிரிந்தது. ஆகஸ்ட் 15-ல் ஏற்றி வைக்கப்பட்ட சுதந்திர விழா தீபங்கள் அணையவும் இல்லை. அதற்குள் செங்கிஸ்கானும், ஹலாக்கூவும் வெட்கப்படத்தக்க சோகக்கதைகள் பஞ்சாபிலிருந்து வர ஆரம்பித்தன.

நடப்பது இதுதானென்றால் முன் ஜாக்கிரதையுடன் மைனரிடியினரை வெளியேற்றாமல் கோடிக்கணக்கான நிரபராதிகளை அபாயத்தில் ஏன் சிக்கவைத்திருக்க வேண்டும்? என்று இந்திய பொது மக்கள் நியாயமாகவே சிந்திக்கலாயினர். பஞ்சாப் சம்மந்தப்பட்டவரை பரிபூரண பரிவர்த்தனை நடந்தேறியே விட்டது. துன்பமே உருவெடுத்த கோடிக்கணக்கான மக்கள் வருகையால் இந்திய சர்க்கார் பலஹீனமடைந்தது. இங்குள்ளவர்களுடன் அகதிகள் கலந்து உறவாட ஆரம்பித்த பிறகு இந்தியாவின் பல பாகங்களில் கலவரங்கள் மூண்டன சந்தர்ப்பத்தை பிரயோஜனப் படுத்திக்கொண்டு பிற்போக்கு சக்திகள் செல்வாக்கு பெற்றுவிட்டன. மக்களின் பொதுவான உணர்ச்சியாலும் பிற்போக்கு சக்திகளின் நிர்ப்பந்தத்தினாலும் இந்திய சர்க்கார் செய்த சில காரியங்கள் சாதாரண காலத்தில் அது செய்திருக்க முடியாதென்பது வாஸ்தவமே. இவ்விதம் சுதந்திரம் கிடைத்த பிறகு சுதந்திரத்திற்காக போராடிய கட்சியே நாளுக்கு நாள் பலஹீனமடைந்து வந்தது.

முஸ்லிம் வகுப்புவாதத்துக்கு கிடைத்த வெற்றிகளும் அதன் பாஸிஸ முறைகளையும் பார்த்து ஹிந்து வாலிபர்களில் ஒரு பிரிவினர் பொறுமை கொண்டனர் அதே முறைகளைக் கையாண்டு தேசீய தலைவர்களை தூற்றவும் இரண்டு சமுதாயக் கொள்கை அடிப்படையில் மிஸ்டர் ஜின்னு செய்ததெல்லாம் திருப்பிச் செய்யவும் அவர்கள் விரும்பினர். இந்தியாவில் ஹிந்து ராஜ்யம் ஸ்தாபித்து பாகிஸ்தானை தகர்த்து இந்தியாவுடன் மீண்டும் இணைத்து தங்கள் தோல்வியை வெற்றியாக மாற்ற முயற்சித்தனர். பாகிஸ்தான் ஐந்தாம் படையினர் என்று சொல்லி முஸ்லீம்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற திட்டமிட்டனர். இந்திய தேசீய ஜனநாயக சர்க்கார் முஸ்லீம்களை காப்பாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளில் சில வெற்றியடைந்தன. சில தோல்வியடைந்தன.

இதுதான் இந்திய முஸ்லிம்கள் லக்னேவில் கூடிய சமயம் இருந்த சூழ்நிலை. முஸ்லிம்கள் தங்கள் எதிர் காலத்தைக் குறித்து முடிவு செய்யவே அங்கு கூடினர். சுருங்கச் சொல்லவேண்டுமானால் லக்னேவில் முஸ்லிம்கள் கூடுவதற்கு முன் கல்கத்தா, நவகாளி, பீஹார், குர்முக் தேஸ்வர் சம்பவங்கள் நடந்தேறி விட்டன. இந்தியா பிரிக்கப்பட்டும் விட்டது. பாகிஸ்தான் கனவும் நனவாகி அதன் பலாபலன்களை அநுபவித்தாயிற்று. ஜனமாற்றம் நடை முறையில் சாத்தியமற்றது என்று கண்டுகொண்டுமாய்விட்டது. பாகிஸ்தான் உதவியில் இருந்த நம்பிக்கை அற்றும் போயிருந்தது. ரயில் பிரயாணம் அசாத்தியமாயிருந்தது. டில்லியிலிருந்து லக்னேவுக்கு வந்தவர்களில் பெரும்பான்மை முஸ்லிம்கள் ஆகாய விமானத்

Regd M. 5068.



தில் வர வேண்டியதாக இருந்தது. பஞ்சாப், டில்லி, ஆள்வார், பரத்பூர் சம்பவங்களை முஸ்லிம்கள் பிரத்யட்சமாய் பார்த்திருந்தனர். 'பகிரங்க பலி' கோஷங்களுக்கிடையே முஸ்லிம்கள் தூக்கமின்றி இரவுகளைக் கழித்தனர். முஸ்லிம் வீடுகள் சோதிக்கப் பட்டு வந்தன. இந்திய விசுவாச பிரமாணம் ஆயிரம் முறை செய்த பிறகும் முஸ்லிம்களை யாரும் நம்பத் தயாராக இருக்கவில்லை. ஹிந்தி ஐக்கிய மாகாண சர்க்கார் பாஷையாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. சௌத்ரி கலி குஸ்ஸமான் இந்தியாவைவிட்டு ஓடிப் போயிருந்தார் தனித்தொகுதி ஒழிந்து 'டான்' பத்திரிகை நின்றுவிட்டது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியும் விட்டனர். 27 டிஸம்பரில் இந்திய முஸல்மான்கள் லக்னேவில் கூடும் போது முஸ்லிம்களின் நிலைமை இதுதான். மஹாநாட்டின் லட்சியம் என்ன என்பதுதான் லக்னேவில் கூடிய பிறகு முதலில் எழுந்த பிரச்னை. எல்லா முஸ்லிம்களின் வாய்களும் "இனி முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்? என்ற வார்த்தைகளையே உச்சரித்தன.

ஆயினும் முஸ்லிம்களுக்கு தனி அரசியல் ஸ்தாபனம் இருக்க வேண்டுமா? இல்லையா? என்று முடிவு செய்வதைத் தவிர மஹாநாட்டுக்கு வேறு நோக்கம் எதுவும் இருக்க வில்லை. தேசீய முஸ்லிம்களும் தங்களுடைய தனித்தனி ஸ்தாபனங்களை கலைக்க விரும்பாமலிருந்தனர். அஹ்ரார், கோமின் ஸ்தாபன பிரமுகர்கள் அரசியலைவிட்டு விலக சம்மதிக்காமல் காரசாரமான விவாதங்கள் நடந்தன. ஆனால் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் பேசுகையில் "எந்தக்கட்சியாக இருப்பினும் சரி. அது வானத்திலிருந்து நட்சத்திரங்களை பறித்து கொடுக்கக் கூடியதாயிருப்பினும் சரி. ஒரு வகுப்புக்காக மாத்திரம் இருந்தால் அதை கலைத்தே யாகவேண்டும். அவ்வித ஸ்தாபனங்களால் தீமையைத் தவிர நன்மை எற்பட முடியாது" என்று தெளிவாகவும் கண்டிப்பாகவும் அறிவித்த பிறகு எல்லோரும் அடங்கிவிட்டனர்.

லக்னே மஹாநாட்டில் பழைய அறிமுகமான முகங்களே அதிகமாய் தென்பட்டன. 1920-ல் காங்கிரஸ்காரர்களாகவும் 'கிலாபத்' போராட்ட வீரர்களாகவும் இருந்து முஸ்லிம்களின் தவறான போக்கினால் மனமுடைந்து ஒதுங்கி இருந்து வந்தவர்கள், முஸ்லிம் லீக் பிரசாரத்தினால் நிலை தடுமாறியவர்கள், எதிர்ப்பு சண்டமாருதங்களை சமாளித்து இழிவு, கேவலம், வசவுகளை சகித்து கடும் சோதனைகளின் அக்கினி பிரவேசம் செய்து பசும்பொன்னாக வெளி வந்தவர்களும் இருந்தனர். இன்னும் சிலர் அன்றே தயாரிக்கப்பட்ட புதிய கதர் ஷேர்வாணிகளில் காட்சி அளித்தனர். இன்னொரு ஆடம்பர உடையணிந்த கூட்டம் கதர் கூட்டத்தின் நடுவே வெட்கி, ஒதுங்கி, பரிதபிக்கத்தக்க நிலையில் காணப்பட்டது. எல்லோரையும் விட கடைசிவரை உறுதியுடன் காங்கிரஸ்காரர்களாக இருந்தவர்களின் நோக்குதற்கரிய முகங்கள் தங்களுடைய கொள்கையின் வெற்றியால் பிரகாசித்துக் கொண்டிருந்தன. பெருமிதத்துடன் அவர்கள் தலை நிமிர்ந்து நடமாடினர். வாழ்க்கையில் முதன் முதலாக பொதுமக்கள் மரியாதை, அன்பு, கௌரவம் கலந்த பார்வையால் தங்களை நோக்குவதை உணர்ந்து உள்ளம் பூரித்தனர். பொதுஜனங்கள் சம்மந்தப்பட்டவரையில், "காங்கிரஸ் முஸ்லிம்களும் விரும்பத் தகாதவர்களாக இல்லாமலிருக்கையில் கடந்த 10 வருஷகாலமாக நாம் ஏன் இவர்களை கேவலப்படுத்தினோம், திட்டினோம், துன்புறுத்தினோம்" என்ற எண்ணம் அவர்களுடைய பார்வையில் பிரதிபலித்துக்கொண்டிருந்தது.

முதலில் லக்னே மஹாநாட்டின் முக்கியத்துவத்தை முஸ்லிம்கள் உணராமலேயே இருந்தனர் 20-ந்தேதி காலையிலிருந்து ஒவ்வொரு ரயிலிலும் ஆயிரக் கணக்கில் பிரதிநிதிகள் வந்திறங்குவதைப் பார்த்து முஸ்லிம் பொதுமக்கள் பிரமித்தனர். இந்தியாவெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் லக்னே மீது படையெடுத்துவிட்டதாகவே சொல்ல வேண்டும். அதன் பிறகுதான் என்ன நடக்கப் போகின்றது என்று அறியும் ஆசை பொதுமக்களுக்கு உண்டாயிற்று.

27-டிஸம்பர் பகல் இரண்டு மணிக்கு கிட்டத்தட்ட ஒருலக்ஷம் முஸ்லிம்கள் கூடிவிட்டனர். மேடை அல்லது மேடைக்கு சமீபமான இடத்தை அடைய தலைவர்களுள் பலப்பரீட்சை ஆரம்பித்தது. கூட்டம் இமாமுல் ஹிந்த் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் வருகைக்காக ஒவ்வொரு வினாடியும் காத்துக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் 'மௌலானா வந்துவிட்டார்' என்ற கோஷம் வானைப் பிளந்தது. பிரசித்திபெற்ற தன்னுடைய கம்பீரத்துடனும் பெருந்தன்மையுடனும் மௌலானா மேடையை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார். மனித வர்க்கத்தின் வழிகாட்டியாக இயற்கை அருளித்தந்த தலைவர், இவர்தான் என்பதை அவருடைய அழகிய, கம்பீரமான தோற்றம் எடுத்துக்காட்டிக்கொண்டிருந்தது. மேடையை நோக்கி கம்பீரமாக முன்னேறிக் கொண்டிருந்த மௌலானாவைப் பார்த்து கூட்டம் ஜூலியஸ் ஸீஸர் என்று முணுமுணுத்தது. நாலு கோடி முஸ்லிம்களுக்கு விமோசனம் அளிக்கும் தகுதி வாய்ந்த தலைவர் இவரே என்று பொதுமக்கள் பார்வையிலிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. (தொடரும்)

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.